## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி
## O.S. No.115/2009

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 30 –ம் நாள் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் பி.சா.2 வாக்குமூலம் 1969ம் ன்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 30.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜேந்திரன் (D.W.2) | வயது | : | 62/2026 |
| க/த பெயர் | : | திரு. சுப்ரமணியன் | தொழில் | : | டைலர் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை ;–**

1) நான் யாருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சேட்டுக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சேட்டு தான் என்னை சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு இன்று அழைத்து வந்தார் என்றால் சரிதான். சேட்டு இன்று நீதிமன்றத்திற்கு ஆஜராகி உள்ளார் என்றால் சரிதான். செங்கம்மாள் என்பவர் யார் என்றால் சேட்டுவின் அம்மா. இந்த வழக்கை யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் சேட்டுவின் அண்ணன் மனைவி சேட்டு மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். சேட்டுக்கு எதிராக மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா அல்லது மற்ற நபரையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் சேட்டு மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார், மற்றவர் பற்றிய விபரம் எனக்கு தெரியாது.
2) வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சேட்டு வழக்கு விபரங்கள் பற்றி என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். செங்கம்மாள் குடும்பத்தை பற்றி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது டைலர் கடைக்கு எதிர்புறம் செருப்பு கடை சேட்டு வைத்துள்ளார், அந்த கடைக்கு அவரது அம்மா செங்கம்மாள் வந்த வகையில் தெரியும். சேட்டு எவ்வளவு நாட்களாக அந்த இடத்தில் கடை வைத்துள்ளார் என்றால் கடந்த 40 வருடமாக வைத்துள்ளார். நான் எவ்வளவு நாட்களாக கடை வைத்துள்ளேன் என்றால் 1987 லிருந்து கடை வைத்துள்ளேன்.
3) செங்கம்மாள் வீட்டிற்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றதில்லை. செங்கம்மாள் வீடு எங்கு உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தாமரைகுளத்தில் உள்ளது. செங்கம்மாள் குடும்ப உறுப்பினர்களை பற்றிய

விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. செங்கம்மாளுக்கு எங்கெங்கு சொத்து உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. செங்கம்மாளின் கணவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. செங்கம்மாளுக்கும் அவரது கணவருக்கும் மன்னார்குடியில் பல இடங்களில் சொத்து உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4) செங்கம்மாளுக்கும் அவரது கணவருக்கும் மன்னார்குடியில் பல இடங்களில் இருந்த சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொடுத்ததாக சேட்டு அவரது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எந்த வழக்கிற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சர்வே எண் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம், நான்கெல்லை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பி.சா.ஆ–3 ஆவணமான உயில் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 27.03.1992. செங்கம்மாள் பி.சா.ஆ–3 உயில் ஆவணத்தை தவிர வேறு ஏதேனும் உயில் ஆவணம் எழுதினாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

5) பி.சா.ஆ–3 உயில் ஆவணத்தை தட்டச்சு செய்து எனது கடைக்கு எடுத்து வந்தார்கள் நான் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். செங்கம்மாளுக்கு சேட்டை தவிர வேறு வாரிசுதாரர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். பி.சா.ஆ.3 ஆவணம் யாரால் ஏற்படுத்தப்பட்டது என்றால் செங்கம்மாவால் எழுதப்பட்டது. பி.சா.ஆ.3 ஆவணம் பதிவு செய்யப்பட்டதா அல்லது பதிவு செய்யப்படாததா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள விபரங்களை யார் சொல்லியது என்றால் செங்கம்மாள் சொல்லியது. பி.சா.ஆ.3 ஆவணம் ஏற்படுத்துவதற்கான தகவலை செங்கம்மாள் சொல்லிய விபரத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை, எழுதி எடுத்து வந்ததில் நான் கையெழுத்திட்டேன். உயில் ஆவணம் தட்டச்சு செய்த விபரத்தை நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை.

6) உயில் ஆவணம் எழுதும்போது செங்கம்மாளுக்கு என்ன வயது என்றால் சுமார் 70 வயது இருக்கும். உயில் ஆவணம் எழுதும்போது செங்கம்மாள் நல்ல உடல்நிலையில் இருந்தாரா என்றால் நல்ல உடல்நிலையில் இருந்தார். என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்க உயில் ஆவணம் எடுத்து வந்த போது செங்கம்மாள் வந்தாரா என்றால் இல்லை. சேட்டு மட்டும்தான் அந்த ஆவணத்தை கொண்டு வந்து கையெத்து வாங்கினாரா என்றால் ஆமாம்.

7) ஆவண எழுத்தர் கோவிந்தராஜ் உயில் ஆவணத்தை தயார் செய்து கொண்டு எனது கடைக்கு எடுத்து வந்தாரா என்றால் ஆமாம். அந்த ஆவணம் எத்தனை ரூபாய் முத்திரை தாள் கொண்டு எழுதப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. அந்த உயில் ஆவணம் எத்தனை பக்கம் கொண்டது என்றால் ஞாபகம் இல்லை. அந்த ஆவணத்தில் என்னென்ன சரத்துக்கள் சொல்லப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. எந்த சொத்திற்காக பி.சா.ஆ.3 ஆவணம் எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

8) பி.சா.ஆ.3 ஆவணத்தில் யார் யார் கையெழுத்திட்டார்கள், யார் யார் கைரேகை வைத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் செங்கம்மாள் கைரேகையும், நானும் சிராஜூதின் மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர் கையெழுத்திட்டோம். நான் கூறிய அனைத்து சம்பவமும் எனது கடையில் சேட்டு முன்னிலையில் நடந்தது என்றால் சரிதான். தாமரை குளத்திற்கு அருகில் தான் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகம் இயங்கி வந்தது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

9) பி.சா.ஆ.3 ஆவணத்தில் எத்தனையாவது பக்கத்தில் நான் கையெழுத்திட்டேன் என்றால் முதல் பக்கத்தில் கையெழுத்திட்டேன். சிராஜூதின் மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர் எத்தனையாவது பக்கத்தில் கையெழுத்திட்டார்கள் என்றால் முதல் பக்கத்தில் கையெழுத்திட்டார்கள். பி.சா.ஆ.3 ஆவணத்தில் முத்திரைதாள் செங்கம்மாள் பெயரில் அல்லது சேட்டு பெயரில் வாங்கப்பட்டதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ.3 உயில் ஆவணத்தில் 2வது பக்கத்தில்தான் எனது கையெழுத்தும், சிராஜூதின் மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர் கையெழுத்தும் உள்ளது என்றால் சரிதான்.

10) எனது முதல் விசாரணையில் செங்கம்மாள் என்முன்னிலையில் உயில் ஆவணத்தில் கையெழுத்திட்டதாக சொல்லிவிட்டு, தற்போது குறுக்கு விசாரணையில் செங்கம்மாள் இல்லாத சமயத்தில் எனது கடையில் கையெழுத்திட்டதாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் செங்கம்மாள் சாட்சி கையொப்பம் இட என்னை அழைத்ததாக சொல்லிவிட்டு தற்போது குறுக்கு விசாரணையில் சேட்டு சாட்சி கையொப்பம் இட என்னை அழைத்ததாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11) பி.சா.ஆ.3 உயில் ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். பி.சா.ஆ.3 உயில் ஆவணம் பதிவு செய்யாததற்கு ஏதேனும் தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையில் உயில் ஆவணத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்று சொல்லிவிட்டு தற்போது குறுக்கு விசாரணையில் உயில் ஆவணத்தில் உள்ள சரத்துக்கள் பற்றிய விபரங்கள் எனக்கு தெரியாது என முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12) வழக்கின் விபரங்கள் எதுவும் முழுதாக தெரியாமல், சேட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சாட்சி கையொப்பம் இட்டதாக சொல்லப்படும் பி.சா.ஆ.3 ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. நானும் பிரதிவாதியும் மோசடியாக பி.சா.ஆ.3 ஆவணம் ஏற்படுத்தி அதனை உறுதி செய்யும் விதமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.30 17:25:28 +0530

District Munsif
Mannargudi.